**பேரூராட்சி அலுவலகம்,**
**மல்லாங்கிணர்,**

**நக.எண்.455/ 2010(அ1).** **நாள்: 10–11–2010.**

# பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2010–2011

## ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணர் இரண்டாம் நிலை பேரூராட்சியில் கீழே கண்டுள்ள வேலைகளை செய்ய இப்பேரூராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 26.11.2010ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணி வரை செயல் அலுவலர் அவர்களாலோ அல்லது அவரால் அங்கீகாரம் பெற்றவராலோ பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தேதியில் 3.30 மணி அளவில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும் குறைந்த ஒப்பந்த புள்ளிகள் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு பின் ஊர்ஜிதம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்படும்.

வேலைகளுக்கான ஷெட்டியூல் படிவங்களை 10–11–2010ம் தேதி முதல் 26–11–2010ம் மாலை 3.00 மணி வரை கீழ்க்கண்ட இணைய தளத்தில் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம்.

இணைய தள முகவரி:1.http:// tntenders.gov.in, 2.http://townpanchayats.tn.gov.in

மேலும் ஷெட்டியூல் படிவங்களை நேரடியாக பெற விரும்புவோர், 10–11–2010ம் தேதி முதல் 25–11–2010ம் மாலை 4.00 மணி வரை மல்லாங்கிணர் இரண்டாம் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக கீழ்க்கண்ட ஷெட்டியூல் படிவம் கட்டணங்களை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

வரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அந்த வேலைக்கு எதிரே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையினை ரொக்கமாக செலுத்தி ஒப்பந்த புள்ளியுடன் இணைத்து கொடுக்கவேண்டும். இது சம்மந்தமாக நிபந்தனை மற்றும் விவரங்களை பேரூராட்சி அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். டெண்டரை மறு தேதிக்கு ஒத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரமும் உண்டு.

| தொகுப்பு எண் | வேலையின் பெயர் | திட்டம் | வேலையின் மதிப்பு தொகை.ரூ. (லட்சத்தில்) | டெபாசிட் தொகை | டெண்டர் ஷெட்யூல் படிவம் கட்டணம் | வேலை செய்து முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | **வார்டு எண்.14, அண்ணாநகரில் சமுதாயக்கூடம் அமைத்தல்** | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010–2011 | 10.00 | 25000 | 1560 ( மதிப்பு கூட்டு வரி உட்பட) | 6 மாதங்கள் |

## ஒப்பந்தப்புள்ளிக்கான நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் இணைய தளத்திலோ அல்லது பேரூராட்சியில் நேரடியாகவோ 26–11–2010ம் தேதி மாலை 3.00 மணி வரை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு பின் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
2. ஒப்பந்தப்புள்ளிகள் ஏதாவது ஒரு வகை மட்டும் அதாவது இணைய தளத்தில் அல்லது நேரடியாக மட்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இரு வகையிலும் சமர்ப்பித்தால், அந்த ஒப்புள்ளிகளை ஏற்க இயலாது.
3. ஒப்பந்தப் புள்ளிகள் மல்லாங்கிணர் இரண்டாம் நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் மல்லாங்கிணர் இரண்டாம் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் 26–11–2010ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3–30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்
4. ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் ஒப்பந்தப் புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர், செயல் அலுவலரின் முகவரி எழுதப்பட்டு மற்றும் எந்த வேலை விபரத்தை என்று தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப் புள்ளிதான் அனுப்ப வேண்டும்.
5. ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை டேவணித் தொகையாக பேரூராட்சியில் செலுத்தி இரசீதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும் இந்த டேவணித் தொகை உரிய அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டவுடன் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படாத ஒப்பந்தக்காரர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர்களுடைய டேவணித் தொகை வேலைகளுக்கான பிணை வைப்புத் தொகையாக வைத்துக் கொள்ளப்படும் இத் தொகைக்கு பேரூராட்சியால் வட்டி எதுவும் கொடுக்கப்பட மாட்டாது.
6. மதிப்பீடு விலைக்குக் கூடுதலாக வேலையைச் செய்வதாகக் குறிப்பிடும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது மதிப்பீடு விலைக்குக் குறைவாக வேலையைச் செய்வதாக ஒப்புக் கொள்கிறவர்கள் 10 சதவிகிதம் வரை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். 10 சதவிகிதத்திற்கு மேற்கொண்டு கூடுதலாகக் கோரும் சதவிகிதத் தொகை கூடுதல் பிணை வைப்புத் தொகையாகச் செலுத்தினால்தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு பேரூராட்சியில் வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது. கூடுதலாகப் பெறப்பட்ட பிணை வைப்புத் தொகை மட்டும் வேலைகள் முடிவுற்று, முடிவு அறிக்கை வந்தபின் திரும்ப வழங்கப்படும்.

7. ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
8. டேவணித் தொகை செலுத்தப்படாத ஒப்பந்த புள்ளிகளும், உரிய படிவத்தில் போடாத புள்ளிகளும், குறித்த நேரத்திற்குப் பிறகு பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.
9 ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும் ஆய்வு செய்யும் அலுவலர்கள் பொறுப்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டால் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் அகற்றிக் கொள்ள வேண்டும்.
10 இதில் குறிப்பிட்டுள்ள வேலையில் பணி முடிவுற்று 6 மாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தககாரர் தனது சொந்தப் பொறுப்பில் சரிசெய்து கொடுக்க வேண்டும். தவறினால் ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகையிலிருந்து பேரூராட்சியால் பழுது பார்க்கப்படும்.
11 பட்டியல் விதிமுறைப்படி ரூ.10,000/– க்கு மேல் செய்யப்படும் வேலைகளுக்கு வருமானவரி, விற்பனை வரி பிடித்தம் கண்டிப்பாகச் செய்யப்படும்.
12 வேலை உத்தரவு வழங்கப்பட்டவுடன் மதிப்பீட்டில் 0.30 சதவிகிதம் கட்டிடத் தொழிலாளர் நலநிதிக்கு வங்கி கேட்பு வரைவோலையாக பேரூராட்சி அலுவலகத்தில் வழங்க வேண்டும்.
13 ஏற்கனவே பேரூராட்சி ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்காத ஒப்பந்தக்காரர்களுக்கு வேலைக்கான செட்யூல் வழங்கப்பட மாட்டாது.
14 **<u>முக்கிய சிறப்பு நிபந்தனைகள்:</u>** கடந்த ஐந்து வருடங்களில் பொறியியல் கட்டுமான பணிகளை செய்து முடிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.
15 வேலை உத்தரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து மேற்படி பணிகள் 6 மாத காலத்திற்குள் கண்டிப்பாக முடிக்கப்பட வேண்டும்.
16 மூலதன நிதியாக ரூ.4.00 லட்சம் கையிருப்பில் இருப்பதற்கான ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்.
17 அரசு சார்ந்த நிறுவனத்தில் ஒப்பந்தக்காரர்கள் தரம் இரண்டு, பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.
18 ஒவ்வொரு மாதமும் வேலை முடிக்கப்பட்ட பணியின் அளவிற்கு ஏற்ப பட்டியல் தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு விதிகளின்படி வழங்கப்படும்.
19 மேற்படி 6 மாத காலத்திற்குள் முடிக்கப்படாமல் இருந்தால், அபராத தொகையாக நாள் ஒன்றுக்கு வேலையின் மதிப்பில் 0.1 சதவீத தொகை பிடித்தம் செய்யப்படும்.
20 அவ்வாறு அபராதம் விதித்தும், 45 நாட்களுக்குள் பணி முடிக்கப்படவில்லையென்றால், ஒப்பந்தத்தை ரத்து செய்யப்படும்.

**செயல் அலவலர்**
மல்லாங்கிணர் **பேரூராட்சி,**
**விருதுநகர் மாவட்டம்.**

**<u>பெறுநர் :–</u>**
அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அலுவலக தகவல் பலகைக்காக.
**<u>நகல் :–</u>**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், சிவகங்கை மண்டலம், சிவகங்கை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) சிவகங்கை மண்டலம், சிவகங்கை அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
4. இளநிலைப் பொறியாளர் (பேரூராட்சிகள்) வத்திராயிருப்பு (தொகுப்பு).